# தாவீது தேவ பக்தியுள்ள இருதயத்திற்குள் ஒரு சிறு கண்ணோட்டம்

*"புகழ்" மற்றும் "செல்வம்" என்பவைகளே அழியக் கூடியவ (மனித) ர்கள் நாடுகின்ற மாபெரும் இரு விஷயங்களாய் உள்ளன. வரலாற்றின் பக்கங்களில் விரைந்தழியக் கூடிய அங்கீகாரத்தைப் பற்றிப் பிடிப்பதற் கென்று வீணான முயற்சியில் பலரது வாழ்வுகள் கவனமின்றி கழிந்து போயின.*

*மகா அலெக்சாண்டர், டயோஜெனஸின் பதில்களினால் ஈர்க்கப்பட்டு, அவர் கேட்பது எதுவாயிருப்பினும் தருவதாகக் கூறினார். அந்தத் தத்துவ வாதி, அழியாமையின் மிக குறைந்த பங்கை (தருமாறு) வேண்டினார். "அது எனது கொடையாக இருப்பதில்லை" என்று அலெக்சாண்டர் கூறினார். அதற்கு டயோஜெனஸ், "அப்படியென்றால், அலெக்சாண்டர் இந்த உலகினை ஒரு கணம் கூட மகிழ்வுடன் அனுபவிக்க இயலாதிருக்கையில், இதை வெற்றிக் கொள்வதற்கு இவ்வளவு துன்பங்களை மேற்கொள்வது ஏன்?" என்று கேட்டார். மகா அலெக்சாண்டர் (தாம்) நினைவுகூரப்பட வேண்டும் என்று விரும்பினார்; அவர் அழியாத புகழை மகிழ்வுடன் அனு பவிக்க விரும்பினார். அந்த விருப்பத்தை இந்நாட்களில் பலர் பகிர்ந்து கொள்கின்றார்கள்.*

*ஈசாயின் மகனான தாவீது நித்தியமான புகழை மகிழ்வுடன் அனு பவிப்பவராயிருக்கின்றார். இவரது புகழ், உலகத்தினால் வளமாய்ப் பேணப்படும் பல பண்புகளின் மீது சுலபமாய் அமைந்திருக்க முடிந்திருந்தது (16:18). இருப்பினும் ஒரு பண்பானது தாவீதுக்கு புகழ்ச்சியையும் செல்வத்தையும் உத்தரவாதப்படுத்தியது. தாவீது தேவபக்தியுள்ள இருதயத்தைக் கொண்டிருந்தபடியினால் நித்தியமான புகழ்ச்சியைப் பகிர்ந்து கொள்கின்றார்! 1 சாமுவேல் 13:14 வசனம், தாவீது "கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதராயிருந்தார்" என்று கூறுகின்றது.*

*ஆடு மேய்க்கும் சிறு பையனாயிருந்த தாவீதை, தேர்ந்து கொள்ளப் பட்டவர்களின் குழுவில் கொண்டு போய் வைத்த அவரது தேவ பக்தியுள்ள இருதயத்தை ஆழ்ந்து சிந்தியுங்கள். 13:14ன் வார்த்தைகள், தாவீது*

*இன்னும் ஒரு சிறு பையனாயிருக்கும் பொழுதே கூறப்பட்டன. இவர் தமது இருபத்தி மூன்று மற்றும் முப்பதாம் வயதுகளுக்கிடையில் ஆளுகை செய்தலைத் தொடங்கினார்; ஆகையால் இந்தக் கூற்றானது சவுலின் ஆட்சி ஒழிந்து போவதற்கு, பத்திலிருந்து பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு கூறப்பட்டிருக்க வேண்டும். இந்த வார்த்தைகள் இவ்விடத்திலும் அப். 13:22 வசனத்திலும் மாத்திரம் காணப்படுகின்றன. சாமுவேலினால் பேசப்பட்ட இந்த வார்த்தைகள் சவுலின் குணத்துடன் (தாவீதின் பண்பு) கொண்டிருக்கக் கூடிய நேரெதிர் இயல்பை முன்னிறுத்துகின்றன. தாவீது பரிபூரணமற்றவராக இருந்தாலும், அதிலும் வயது வந்த ஆண்டுகளின் பிற்பகுதியில் அவர் அவ்விதமாயிருந்தாலும், இவர் அப்பொழுதும் தேவனை நாடிய ஒரு எண்ணப்போக்கைக் கொண்டிருந்தார். இந்த "இருதயம்" தான் நம் கவனத்தைக் கவருகின்றது. இது விலை மதிப்பேறிய பண்பு என்ற வைரங்களைக் கொண்டுள்ளது.*

## தேவபக்தியுள்ள இருதயத்தின் மதிப்பு

*ஒடுக்கப்பட்டவர்களைக் குறித்துத் தாவீது அக்கறையாயிருந்தார் (23:5). சவுலின் பொறாமை, தேடப்படுபவராக வாழும்படி தாவீதைத் துரத்திற்று. அவ்வாறு "ஓடிக் கொண்டிருக்கையில்" தாவீது ஒரு படையை ஒன்றுகூட்டினார் மற்றும் தாமே சுயாதீனமாக நியாயத்தை அமுல் படுத்துபவரானார். 1 சாமுவேல் 23ல் இவர் இஸ்ரவேலின் எல்லைப்புற நகரொன்று பெலிஸ்தர்களால் அச்சுறுத்தப்பட்டுக் கொண்டிருந்ததாகக் கேள்விப்பட்டார். தாவீதை சவுல் உக்கிரமாகத் தேடிக் கொண்டிருந்தாலும், இவர் தம் ஆர்வங்கள் அந்த மக்களுக்கு உதவியளிக்கும்படி இவரை கட்டாயப்படுத்தின.*

*இது ஒரு உயர்வான செயலாயிருந்தது. தாவீது மற்ற பல மனிதர்களைப் போல் இருந்திருந்தால், பழி வாங்குவதற்கான விருப்பத்தைத் தம் மனதில் தேக்கியவராக, (பெலிஸ்தரின் அந்தப்) படையெடுப்பில் மகிழ்வடைந்திருப்பார், ஏனென்றால் அப்படிப்பட்ட படையெடுப்புக்கள் சவுல் ஒரு அரசராயிருக்கத் தகுதியற்றவர் என்பதை இன்னும் அதிகமாய் வெளிப்படுத்தின. ஆனால் தாவீது, ஒடுக்கப்பட்ட தம் சகோதரர்களுக்காகக் கொண்டிருந்த அக்கறை, அவர்களுக்கு உதவும்படி அவரை வழிநடத்திற்று. தேவபக்தியுள்ள இருதயம் சுயத்தின் மீது முற்றிலுமாக ஆர்வமற்றதாகி பிறருக்கு ஊழியம் செய்வதையே நாடுகின்றது (இ.வ. பிலி. 2:3, 4; 1 கொரி. 10:24; 12:25-27). ஒடுக்கப்பட்டவர்கள் மீதான இந்த அக்கறையானது தேவனுடைய சொந்த இருதயத்தில் தோன்றியது (சங். 86:5, 13, 15, 16; யாக். 5:11).*

*தாவீது விரோதிகளிடம் (கூட) இரக்கம் நிறைந்தவராயிருந்தார் (24:5, 10, 19). இவர் சவுலின் உயிரைத் தமது கைகளில் பெற்றிருந்தார். இவர் ஒரு வார்த்தை கூறியிருந்தால் போதும், சவுல் கொல்லப்பட்டிருப்பார். ஆனால் தாவீது மறுத்து விட்டார், ஏனெனில் இவர் தமது மாபெரும் விரோதியிடம்*

*இரக்கம் காட்ட முடிவு செய்திருந்தார்!*

*இரக்கத்தைக் காட்டிலும் தேவனுடைய இருதயத்தில் வேறு எந்த பண்பு பெரியதாக உள்ளது? (இ.வ. தீத்து 3:3-7; எபே. 2:4, 5.) நாம் இரக்கத்தின் மீது கவனம் செலுத்தி அதற்கு நம் இருதயங்களில் இடம் கொடுக்க வேண்டும். கோபத்திற்குத் தம்மை ஒப்புக்கொடுத்த பிரபுவைப் பற்றிய கதை ஒன்றுள்ளது. கிறிஸ்துவைப் பற்றிப் படிப்பதன் மூலம் அவர் தமது கோபத்தைக் குணமாக்க விரும்பினார். துன்புறுத்தப்படுதல், அவமதிக்கப் படுதல் ஆகியவற்றின் கீழ் நமது கர்த்தரின் பொறுமையானது அந்தப் பிரபுவை அதிகம் சிந்திக்க வைத்தது. அவர் கோபம் கொள்ளும்படி சோதிக்கப்பட்ட ஒவ்வொரு வேளையிலும், கிறிஸ்துவைக் குறித்துத் தியானித்தார். விரைவிலேயே அவரது இருதயமானது கிறிஸ்துவின் இரக்கம் நிறைந்த இருதயம் போல் மாற்றம் அடைந்தது.*

*தாவீது தமக்குக் கெடுதல் செய்தவர்களிடத்தில் நியாயமாய் நடந்து கொண்டார் (25:23 முதல்). தாவீது தமது இளகிய இருதயத்தினால், அபிகாயிலினால் இணங்க வைக்கப்படக் கூடியவராயிருந்தார். இவர் ஒரு நியாயமான மனிதராயிருந்தார், இவ்விதமாக பயங்கரமான தவறு ஏற்படுவதைத் தவிர்த்தார் (இ.வ. 25:32-35).*

*நியாயமாயிருக்கும் தன்மை நமது மாபெரும் தேவனைப் பண்புப் படுத்துகின்றது. தண்டிப்பதற்கு ஒருக்காலும் துரிதப்படாத நமது தேவன் தம்முடைய முடிவுகளில் எப்பொழுதும் நியாயத்தை செயல்படுத்துகின்றார் (ஆதி. 6:3; 1 பேது. 3:20). இப்படிப்பட்ட நியாயமான பண்பு, தேவன் உதவி செய்யும்படி நாடியவர்களினால் அடிக்கடி தவறாகப் பயன்படுத்தப்பட்டது (நெகே. 9:28-31). பெரும்பான்மையானவர்கள் தேவபக்தியுள்ள இருதயத்தின் இந்தப் பண்பில் குறைவுபடுகின்றார்கள். நாம் பிறர் மீது நியாயத்தீர்ப்பு மற்றும் நீதி ஆகியவற்றைச் செலுத்துவதில் மிகவும் பொறுமையற்றவர்களாக இருக்கின்றோம்! தேவனுடைய இருதயத்தின் இந்தப் பண்பை நமது வாழ்வில் நாம் பேணிக் காக்கவேண்டியது அவசியமாக உள்ளது (கலா. 5:22; எபே. 4:1, 2).*

*தாவீது பொல்லாங்கின் மீது பலத்தையும் கடுங்கோபத்தையும் காண்பித்தார் (17:32 முதல்). காத் என்ற ஊரிலிருந்து வந்த இராட்சதன் தவறான இருதயம் கொண்டிருந்தபடியினால் தாவீதினால் அழிக்கப் பட்டான். தாவீது கோலியாத்தை முகமுகமாய் எதிர்த்து நின்று தேவனுக்குள் தாம் கொண்டிருந்த பெலத்தை தைரியமாய் உறுதிப்படுத்தினார் (17:45, 50அ). தேவனுடைய சித்தத்திற்கு ஒத்த இருதயம் கொண்டுள்ள யாவரும் பொல்லாங்கின் மிக இலேசான கூறையும் கூட சகித்துக் கொள்ள மாட்டார்கள் (நாகூம் 1:6). பெலம் வாய்ந்த தேவபக்தியுள்ள இருதயத்தைக் கொண்டுள்ள விசுவாசி தமக்கும் பாவத்திற்கும் நடுவில் கோடு ஒன்றை வரைந்து, அதைத் தாண்டிச் சென்றால் பொல்லாங்கின் மீதான, தேவனுடைய கடுங்கோபத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டியிருக்கும் என்பதால் ஒருக்காலும் அதைத் தாண்டிச் செல்ல மாட்டார் (இ.வ. ரோமர் 6:1ஆ-2அ; எபே. 5:7-11; 1 தெச. 4:4).*

*தாவீது மன்னிப்பைச் செயல் விளக்கப்படுத்தினார் (26:21). சவுலைக்*

*கொல்வதற்குத் தாவீதுக்கு இரண்டாம் முறையாக ஒரு வாய்ப்புக் கிடைத்தது. முதல் வாய்ப்புக் கிடைத்திருந்தது பல ஆண்டுகள் கழிந்திருந்தது (24:2), ஆனால் சவுலின் வாக்குறுதி காக்கப்படாமல் போயிற்று. தாவீது இன்னும் தமது தலைக்கு விலை வைக்கப்பட்ட மனிதராக இருந்தார், சவுலே அதற்குப் பொறுப்பாயிருந்தார்! 26:21ல் காணப்படும் சவுலின் மன்னிப்பு வேண்டுகோள் தாவீதினால் வினையமிக்கதாக எடுத்துக் கொள்ளப்படாதிருந்தது, ஏனென்றால் சவுல் அவரைத் திரும்பி வருமாறு அழைத்ததும் கூட அவர் தம் வழியே போய் விட்டார்.*

*மன்னிப்பு எப்பொழுதும் கிடைப்பதாக உள்ள ஒரு இருதயமாக நம் இருதயத்தை நாம் மேம்படுத்திக் கொள்ள வேண்டும் (மத். 18:35; 6:12; கொலோ. 3:13), நமது இருதயமானது, அன்பு பெருக்கெடுத்தோடுவதும் மன்னிப்பு கிடைப்பதுமாயிருக்கின்ற தேவனுடைய இருதயத்தைப் போல் இருக்க வேண்டும் (ஓசி. 6:1, 2; யோனா 4:2).*

*தாவீது அதிகாரத்திற்கு மதிப்பைச் செயல்விளக்கப் படுத்தினார் (29:9, 10). சவுல் மரணத்திற்குப் பாத்திரராய் இருந்த போதிலும், அதிகாரம் தேவனிடத்திலிருந்து தோன்றியதால் (சவுலுக்குத் தரப்பட்டிருந்ததுமான) அதிகாரத்தின் தகுதி நிலைக்கு தாவீது மதிப்பளித்தார். தாவீது தமது நடக்கை யாவற்றிலும் சவுல் இஸ்ரவேலின் அரசர் என்று ஒப்புக் கொண்டார். தாவீது, தேவனுடைய பிரமாணங்களை மாற்றுவதற்கு ஒருக்காலும் முயற்சி செய்ததில்லை, மற்றும் இவரது பொது நடக்கையானது தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றியது.*

*தேவ பக்தியுள்ள இருதயங்கள் எப்பொழுதும் தேவனுடைய பிரமாணத்தைப் பின்பற்ற விரும்புகின்றன. தேவ பக்தியுள்ள இருதயங்கள் தேவனுடைய பிரமாணத்திற்கு இசைந்தவைகளாக அவற்றில் ஒருக்காலும் மாற்றியமைத்தல்களை நாடாதவையாக இருக்கும், மற்றும் அவற்றைப் புறக்கணிக்காமலும் இருக்கும் (எஸ்றா 7:10).*

*யாரோ ஒருவர், "மனிதரின் இருதயம் என்பது தொடர்ந்து பற்றி யெரியும் அடுப்பாக உள்ளது. நீங்கள் அதை தேவனுடைய அன்பின் சிந்தனைகளைக் கொண்டு வளமூட்டினால், தேவன் மீதும் மனிதர் மீதுமான அன்பின் பிரகாசமிக்க சுடர் ஒன்று அதில் தோன்றும். ஆனால் அதை நீங்கள் சுய-அன்பின் சிந்தனைகளைக் கொண்டு வளமூட்டினால், அது கடுமையான புகையினாலும், நெடியினாலும், இருளினாலும் நிறைந்திருக்கும்" என்று கூறினார்.*

## தேவபக்தியுள்ள இருதயத்தின் விளைவுகள்

*மேல் பட்டியலிடப்பட்ட பண்பினங்களினால் ஒரு மனிதரின் இருதயம் வடிவமைக்கப்படும் போது, பின்வரும் விளைவுகள் அவரது வாழ்வை ஆசீர்வதிக்கும்:*

*அவர் தேவனுடைய வல்லமையில் பற்றும் திட நம்பிக்கையும் கொண்டிருப்பார். சவுல் தமது சுய பெலத்தைக் குறித்துப் பெருமை*

*யடைந்தார், இதன் விளைவாகத் தோல்வியடைந்தார். தாவீது ஒவ்வொரு விஷயத்திலும் தேவன் மீது நம்பிக்கையாயிருந்தார், இவர் வெற்றி யாளரானார் (17:5-47; சங். 115:3; 135:6).*

*இங்கிலாந்தின் அரசராயிருந்த முதலாம் எட்வர்டு (1239-1307) என்பவர், பரிசுத்த இடங்களுக்குச் (வேதாகம நிகழ்ச்சிகள், அதிலும் சிறப்பாக இயேசுவின் வாழ்வின் நிகழ்ச்சிகள் நடந்த இடங்களுக்கு) செல்வதற்கு மாபெரும் விருப்பம் கொண்டிருந்தார். ஆனால் அவரது நாட்டில் நடந்த யுத்தம் ஒன்று அவரைத் தடை செய்தது. அவர் தம் மகனிடத்தில், தாம் இறந்தபின் அவன் தன் தந்தையின் இருதயத்தை அங்கு கொண்டு செல்ல வேண்டும் என்று கண்டிப்பான கட்டளை கொடுத்தார். அந்த நோக்கத்திற்காக எட்வர்டு, அதற்காகும் செலவுகளை ஈடுகட்டு வதற்காக சுமார் இருபத்தி ஐந்து இலட்சம் ரூபாய்கள் தனியே ஒதுக்கி வைத்து, அத்துடன் அந்தப் பயணத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று 140 வீரர்களுக்குக் கட்டளையிட்டார். இது போலவே, கிறிஸ்தவர்களின் தேவபக்தியுள்ள இருதயங்கள் தங்களின் நித்திய இல்லமான பரலோகத்தை இன்னும் அடையாதிருப்பினும், அவைகள் அங்கேதான் உள்ளன.*

*தாவீது மன்னிப்பு அளிக்கக் கூடியவராயிருந்தார். சாமுவேல் சவுலை எதிர்கொண்ட பொழுது, அரசர் பயம் கொள்ளவில்லை. சவுலின் அறிக்கையிடுதல் உண்மையானதாக இருக்கவில்லை. இது, தாவீது நாத்தானால் எதிர்கொள்ளப்பட்ட பொழுது நடந்ததில் இருந்து எவ்வளவாய் மாறுபட்டு இருந்தது! சங்கீதம் 51ன் வார்த்தைகள் செயல் விளக்கப்படுத்துகின்றதைக் காட்டிலும் அதிகமான துக்கம் ஒருபொழுதும் மெய்ப்படவில்லை.*

*"தேவனுடைய சொந்த இருதயத்தில்" பங்கேற்பவர்கள் (அல்லது) தேவனுடைய இருதயத்திற்குப் பிரியமாய் நடந்து கொள்பவர்கள், பாவத்தின் பரிதாபமான வீழ்ச்சியைப் பற்றி அறிந்துள்ளனர் மற்றும் தேவனு டைய மன்னிப்பு தாராளமாய்க் கிடைப்பதினிமித்தம் அவர்கள் மகிழ்வடைகின்றனர் (சங். 38:3, 18; 1 யோவா. 1:7, 9; எபி. 8:12).*

*தாவீது, தேவனுக்கு ஒப்புக் கொடுத்தலுக்கும் உறுதிப்பாட்டுக்கும் ஒரு வழி உடமையையும் விட்டுச் சென்றுள்ளார். இவர் இறந்து பல நூற்றாண்டுகள் கழிந்திருந்தும் இன்னமும் இவர் தம் தேவபக்தியுள்ள இருதயத்தினிமித்தம் அறியப்படுகின்றார் (அப். 13:32). தேவபக்தியுள்ள இருதயம் கொண்ட யாவரும் ஆபேலைப் போல என்றென்றும் பேசுவார்கள் (எபி. 11:4ஆ).*

## *முடிவுரை*

*தாவீதினால் விவரிக்கப்பட்ட தேவபக்தியுள்ள இருதயத்தின் பண்புகள் நமது மாபெரும் தேவனுக்குள்ளாகவும் காணப்படுகின்றன: அவர் (தேவன்) ஒடுக்கப்பட்ட யாவர் மீதும் கரிசனை கொண்டுள்ளார்; அவருடைய கிருபையானது எல்லா மனிதருக்கும் நீட்டிக்கப்படுகின்றது. அவர் பொல்லாங்கைக் குறித்துக் கோபம் கொள்ளுகிறார், அதைச் சகித்துக்*

கொள்ளமாட்டார்: அவர் நியாயமுள்ளவராக, நீடிய பொறுமை யுள்ளவராக இருக்கின்றார்; அவர் எல்லாப் பாவங்களையும் அழித்து நீக்கத் தயாராக வைத்துள்ள மன்னிப்பை நம் வரைக்கும் நீட்டிக்கின்றார்; அவர் அதிகாரம் கொண்டவராக இருக்கின்றார் மற்றும் அவர் கடைசி நாளில் நியாயம் தீர்ப்பார்.

யூதர்கள் மத்தியில் மாபெரும் போதகராயிருந்த ஒருவர், தம்மிடம் கல்விப் புலமை பெற்றவர்களிடம் ஒருவரை நேர்மையாகக் காத்துக் கொள்வதற்கு மிகச் சிறந்த விஷயமாக உள்ளது எது என்று ஆழ்ந்து சிந்தித்துக் கூறும்படி கேட்டுக் கொண்டார். ஒருவர் வந்து, நல்ல கண்களைப் பார்க்கிலும் மிகச் சிறந்தது வேறில்லை என்றார். இன்னொருவர், நல்ல நண்பர் என்றார். மூன்றாமவர் வந்து நல்ல அயலகத்தார் என்றார், நான்காமவர் ஞானம் என்று கருத்துத் தெரிவித்தார். கடைசியில் ஒருவர் வந்து, நல்ல இருதயமானது மற்ற எல்லாவற்றையும் விட மிகச் சிறந்ததாகும் என்றார். அதற்குப் போதகர், ‘‘உண்மைதான், நீ மற்ற எல்லாரும் கூறியவற்றையெல்லாம் இரண்டே வார்த்தைகளில் சுருக்கி உரைத்து விட்டாய். ஏனெனில் நல்ல இருதயம் கொண்டவர் நிறைவடைந்தவராக, ஒரு நல்ல நண்பராக, ஒரு நல்ல அயலகத்தாராக இருப்பார் மற்றும் அவர் தாம் செய்யத் தகுதியானது எது என்பதை சுலபமாய்க் காண்பார்’’ என்று கூறினார். இப்படிப்பட்டதுதான் ஈசாயின் மகனான தாவீதின் ஆலோசனையாக உள்ளது: தேவபக்தி கொண்ட(தாக) இருதயத்தை மேம்படுத்திக் கொள்ளுங்கள்!